பாடம்-9

## நியாயாதிபதிகள், இராஜாக்கள், தீர்க்கதரிசிகள்

மோசே மரித்த பின்பு தேவன் தனது மக்களை வழிநடத்த மற்றொரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார். இவர் பெயர் யோசுவா. நாட்டை வேவு பார்பதற்கு அனுப்பட்ட பன்னிரு வேவுக்காரர்களில் இவரும் ஒருவர். நாம் நாட்டைப் படிப்பதற்கு தேவன் நமக்கு உதவி செய்வார் என்ற நற்செய்தியை இவர் கொண்டுவந்தார். இதனால் இவரும் மற்றொரும் விசுவாமுள்ள வேவுக்காரராகிய காலேப் என்பவர் மட்டும், எகிப்தைவிட்டுப் புறப்பட்டவர்களில் கானான் தேசத்திற்குள் நுழைய முடிந்தது. மீதி சுமார் 6,00,000 மனிதர்கள் வனாந்தரத்தில் 40 ஆண்டுகள் சுற்றித்திரிந்தபோது மரித்தனர். தேவன் நாட்டை அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுத்தார்.

## நாட்டை சுதந்தரித்தல்

இஸ்ரவேலர்கள் யோர்தான் நதியை அற்புதவிதமாக கடந்த பின்பு நாட்டை சுதந்தரிக்க ஆரம்பித்தனர். இஸ்ரவேலர்கள் எரிகோ பட்டணத்தை 13 முறை சுற்றி வந்த போது தேவன் எரிகோ பட்டணத்தின் மதிற்சுவர்கள் யாவும் இடிந்து போகப்பண்ணினார். இதைத்தொடர்ந்து தேசம் முழுவதையும் இஸ்ரேவேலர்கள் சுதந்தரித்துக்கொண்டனர்.

## நியாயாதிபதிகளின் காலம்

யோசுவா மரித்த பின்பு தனது மக்களை வழிநடத்துவதற்கு தேவன நியாயாதிபதிகளைத் தேர்ந்தெடுத்தார். அவர்களனைவரைக்குறித்தும் நாம் இங்கு விவரிக்க இயலாது. **"நியாயாதிபதிகள்"** என்னும் புஸ்தகத்தில் அவர்களது வாழ்க்கையை நீங்கள் நன்கு அறியலாம்.

| | | |
|---|---|---|
| ஏகூத் | - | இடதுகைப் பழக்கமுள்ள நியாயாதிபதி |
| தெபோராள் | - | பெண் நியாயாதிபதி |
| கிதியோன் | - | 300 பேதைக் கொன்ற தேவனுடைய போர்வீரன் |
| சிம்சோன் | - | இதுவரை உலகில் ஜீவித்தவர்களில் மிகவும் பலசாலி |
| சாமுவேல் | - | கடைசி நியாயாதிபதி |

## ராஜாக்களின் காலம்

இஸ்ரவேல் மக்கள் தேவனை ராஜாவாகவும், மற்ற நியாயாதிபதிகளையும் ஏற்க மறுத்தனர். (1 சாமு 8:1-7) தேவன் அவர்கள் விருப்பப்படி அவர்களுக்கு ஒரு ராஜாவைக் கொடுத்தார். அந்த ராஜாவின் பெயர் சவுல். இரண்டாவதாக தாவீதை ராஜாவாக மாற்றினார். அதன் பின்பு அவர் குமாரணான சாமோன் ராஜாவானான்.

## ராஜ்யம் இரண்டாக பிரிதல்

சாலமோனின் மரணத்திற்கு பின்பு ராஜ்யம் இரண்டாகப் பிரிந்தது. இந்த இரண்டு

ராஜ்யங்களும் சிலகாலம் கழித்து அடிமையாக்கப்பட்டு நாட்டு மக்கள் சிறைபிடிக்கப்பட்டனர். கீழேகாணும் அட்டவனை மூலம் சில காரியங்களை நாம் தெரிந்து கொள்ள இயலும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ராஜ்யத்தின் பெயர் | - | யூதா | - | இஸ்ரவேல் |
| அமைந்த இடம் | - | தென்பகுதி | - | வடபகுதி |
| கோத்திரங்களின் எண்ணிக்கை | - | 2 | - | 10 |
| சிறை பிடிக்கப்பட்ட காலம் | - | கி.மு. 605 | - | 722 |
| சிறை பிடிக்கப்பட்ட இடம் | - | பாபிலோன் | - | அசிரியா |
| ராஜாக்களின் தன்மை | - | நல்லவர்களும் | - | தீயவர்களும் |

தீயவர்கள் தேவனை சில காலம் விசுவாசித்தனர். சில காலம் விசுவாசிக்கவில்லை.

## தீர்க்கதரிசிகள்

தீர்க்கதரிசிகளில் பலர் சாலமோனுக்குப் பின்பு ஜீவித்தவர்கள். இவர்கள் தேவனுடைய பேச்சாளர்கள். இவர்கள் ஜனங்கள் மனந்திரும்ப வேண்டும். என்பதைப் பற்றியும் இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும் எடுத்துக் கூறினார். பழைய ஏற்பாட்டிலுள்ள கடைசி பதினேழு புத்தகங்களும் இந்த தீர்க்கதரிசிகளில் சிலரால் எழுதப்பட்டவையாகும்.

## சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதல்

எழுபது ஆண்டுகள் பாபிலோனில் சிறையிலிருந்த பின்னர் இஸ்ரேவேலர்கள் தங்களது கானான் தேசத்யீதற்கே திரும்பி வந்தனர். அவர்கள் **செருபாபேல், எஸ்றா, நெகேமியா** இம்மூவர்தலைமையின் கீழ் திரும்பி வந்தனர். இவர்கள் தங்களது தேசத்திலேயே இயேசு வரும்வரை இருக்க வேண்டியிருந்தது. இஸ்ரவேல் தம் நாடுதிரும்பிய வரலாற்றை எஸ்ரா, நெகேமியா ஆகிய இருபுத்தகங்களிலும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.